4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க் கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்துமூன்று வரையிலான அறிக்கைகள்."

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்து பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை".

5. (i) சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

* மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.